JESUS GOOD SHEPHERD MINISTRIES
CHENNAI - 82

# இயேசுவே நல்ல மேய்ப்பன் ஊழியம்

## நம்பிக்கையின் வார்த்தை
## *Word of Hope*

**எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள்,
அதினிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்.**
**– நீதி 4:23**

# பிப்ரவரி 2017

**அவர் உமது மனவிருப்பத்தின்படி
உமக்குத் தந்தருளி**
**– சங்கீதம் 20:4**

ஆசிரியர்
R. கிங் டேவிட்



இருதயம் என்றால் என்ன... மனிதனின் அறிவுத்திறன் மொத்த இருப்பிடமாகும். உணர்ச்சி, ஆசை, விருப்பம் பொதுவாக தலையும் அதற்குள் இருக்கும். மூளையும்தான் மனித செயல்களின் மையமென்றும், அவைகளைக் கட்டுப்படுத்துகின்றன எனவும் இக்காலத்து மக்கள் கூறுகின்றனர். ஆனால் வேதமோ இருதயம்தான் மையமானது என்றும் **“அதினிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்.”** என்றும் கூறுகின்றது. [நீதி 4:23/லூக்கா 6:45] வேதத்தின்படி மனிதபுத்திக்கூர்மை, உணர்ச்சி, செயல்திறன் இவை அனைத்தும் மனிதனது இருதயத்திலேயே மொத்தமாக அமைந்துள்ளது.

இருதயம் நமது புத்திக் கூர்மையின் மையமாகும் மனிதர் காரியங்களை இருதயத்தில் அறிகின்றனர். இருதயத்தில் ஜெபிக்கின்றனர், தங்கள் இருதயத்தில் தியானிக்கின்றனர், தேவனுடைய வசனத்தை இருதயத்தில் மறைத்து வைக்கின்றனர், தங்கள் இருதயங்களில் திட்டங்களை உருவாக்குகின்றனர், வார்த்தைகளை இருதயத்தில் பத்திரப்படுத்துகின்றனர், இருதயத்தில் விசுவாசிக்கின்றனர், இருதயத்தில் நினைக்கின்றனர், இருதயத்தில் சந்தேகப்படுகின்றனர், இருதயத்தில் சிந்திக்கின்றனர், இருதயத்தில் பாடுகின்றனர். மனதில் உருவாகும் இக்காரியங்கள் அனைத்தும் இருதயத்தோடு இணைந்தவை ஆகும்.

**எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது, அதை அறியத்தக்கவன் யார்?**
**- (எரே 17:9)**

எரேமியாவின் கண்டுபிடிப்பை இயேசு உறுதி செய்ததுடன் தேவனுடைய சமூகத்தில் ஒரு மனிதனைத் தீட்டானவனாக ஆக்குவது அவன் ஒரு சடங்காச்சாரமான ஒரு கற்பனையை மீறுவதனால் ஏற்படுவதில்லை. இருதயத்தில் மறைந்திருக்கும் துன்மார்க்கத்துக்கு செவி கொடுத்து பொல்லாத சிந்தனை, விபசாரம், துஷ்டத்தனம், கபடு, காமவிகாரம், வன்கண், தூஷணம், பெருமை, மதிகேடு இவற்றைச் செய்வதே பாவமென்றும் கூறினார்.



# புதிதாக்கப்பட்ட இருதயம்

பாவம் நிறைந்த இருதயத்திற்கு தேவன் அளிக்கும் பதில் “புதிதாக்கப்படுதலாகும்“ இது பாவத்திலிருந்து மனந்திரும்பி தேவனிடத்தில் வந்து இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளும்போது உருவாகின்றது.

புதிதாக்கப்படுதல் இருதயத்தில் நிகழ்கிறது. இருதயத்தில் மனஸ்தாபமடைந்து இயேசு தேவனென்று அறிக்கையிட்டு பாவமன்னிப்படைவார்கள் (ரோமர் 10:9).

புதிய இருதயத்தை தேவனிடத்திலிருந்து பெறுகிறார்கள் (சங் 51:10).

கீழ்ப்படிதலின் மிகமுக்கிய அம்சம் நேசமாகும், பல வேளைகளில் தேவனுடைய பிள்ளைகள் கீழ்ப்படிதலுக்கு பதிலாக வெளிப்படையான மதசடங்குகளை நடத்துகின்றனர் (பண்டிகைநாட்கள், காணிக்கை, பலி போன்றவை) உண்மையான அன்பை அவர்கள் வெளிப்படுத்துவதில்லை (ஏசா 1. 10:17). ஆமோஸ் 5:21-26 குறிப்பைக் கவனிக்கவும்.



தேவனைச் சேவிக்கும் வாஞ்சை-யின்றி வெளிப்புறத்தில் காட்டப்படும் சடங்குகள் மாய்மாலமென்று தேவனால் கண்டிக்கப்படுகின்றன (மத் 23:13-18).

மறுஜென்மம் அடைந்த விசுவாசிகளின் இருதயத்தில் பல ஆவிக்குரிய செயல்முறைகள் நடைபெறுகின்றன. அவர்கள் முழுஇருதயத்தோடும் தேவனைத் துதிக்கின்றனர் (சங் 9:1).

இருதயத்தில் தியானிக்கின்றனர் (சங் 19:14)

இருதயத்திலிருந்து தேவனிடத்தில் கதறுகின்றனர் (சங் 84:2)

முழு இருதயத்தோடும் கர்த்தரை தேடுகின்றனர் (சங் 119:2,10)

இருதயத்தில்தேவவார்த்தைகளைப்பதித்துவைக்கின்றனர் (சங் 119:11)

முழு இருதயத்தோடும் தேவனை நம்புகின்றனர் (நீதி 3:5)

இப்படியாக தேவன் உங்கள் யாவறோடும் இருதயத்தின் நினைவுகளை அறிகிறார். அவர் உமது மனவிருப்பத்தின்படி உமக்குத் தந்தருளி, உமது ஆலோசனைகளையெல்லாம் நிறைவேற்றுவாராக.

நாங்கள் கூப்பிடுகிற நாளிலே ராஜா எங்களுக்குச் செவிகொடுப்பாராக. ஆமென்.

